25. ஒரு பேனாவின் விலை 25 ரூபாய் ஆகும். இரண்டு பேனாக்களை வாங்கிய சந்திரன், அதற்காகக் கடைக்காரரிடம் 2 ரூபாய்களும் 5 ரூபாய்களுமாக மொத்தம் பதினாறு நாணயக் குற்றிகளைக் கொடுத்தான். அவன் கொடுத்த 2 ரூபாய் நாணயக் குற்றிகளின் எண்ணிக்கை யாது?

(1) 8 (2) 10 (3) 13

26. வாசுகி, யமுனா ஆகிய இருவரினதும் வயதுகளின் கூட்டுத்தொகை 48 வருடங்களும் யமுனா, மாதவி ஆகிய இருவரினதும் வயதுகளின் கூட்டுத்தொகை 52 வருடங்களும் வாசுகி, மாதவி ஆகிய இருவரினதும் வயதுகளின் கூட்டுத்தொகை 50 வருடங்களுமாகும். இம்மூவரிலும் வயதில் குறைந்தவர் யார்?

(1) மாதவி (2) யமுனா (3) வாசுகி

27. முதலில் தரப்பட்டுள்ள கடதாசியின் முன்பக்கத்தைப் போலவே அதன் பின்பக்கமும் நிறம்தீட்டப்பட்டுள்ளது. முறிந்த கோடுகள் வழியே அக்கடதாசி இரண்டாக மடிக்கப்படும் போது கடதாசி காணப்படும் விதத்தைத் தெரிவு செய்க.



(1) (2) (3)

28. எண்கள் எழுதப்பட்டுள்ள முறைக்கு ஏற்ப வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

| | | | | |
|---|---|---|---|---|
| 813 | ⟷ | 580 | = | 1213 |
| 467 | ⟷ | 374 | = | 1714 |
| 546 | ⟷ | 186 | = | ..... |


(1) 1515
(2) 2315
(3) 3216

29. ஒரு கடிகாரத்தின் நிமிட முள்ளானது சுற்றிக் கொண்டிருக்கும் போது பி.ப. 4.15 இல் இருந்து பி.ப. 7.25 வரை எத்தனை தடவைகள் மணித்தியால முள்ளைச் சந்தித்துச் செல்லும்?

(1) 2 (2) 3 (3) 4



www.ikeou.lk


30. 

இந்த உருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதி முழு உருவின்,

(1) $\frac{1}{4}$ இலும் குறைவாகும்.

(2) $\frac{1}{4}$ இற்குச் சமமாகும்.

(3) $\frac{1}{4}$ இலும் கூடியதாகும்.

31. 


அம்புக்குறிகள் காட்டும் திசை வழியாக மாத்திரம் பயணிப்பதன் மூலம் நகரம் X இல் இருந்து நகரம் Y இற்குச் செல்ல முடியும். அதன்படி நகரம் X இல் இருந்து நகரம் Y இற்குச் செல்ல ஒன்றிலிருந்தொன்று வேறுபட்ட எத்தனை வழிகள் உள்ளன?

(1) 5 (2) 7 (3) 8

32.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| IV | XI | VIII | XIV | XVI | VI | XIX |

இங்கு தரப்பட்டுள்ள ஏழு உரோமன் இலக்கங்களையும் ஏறுவரிசைக்கு ஒழுங்குபடுத்தவதற்காக எத்தனை உரோமன் இலக்கங்களின் இடங்களை மாற்றுதல் வேண்டும்?

(1) 3 (2) 4 (3) 5


33. 'மனநிறைவே ஒருவனுக்குச் சிறந்த செல்வமாகும்' என்ற கருத்தைத் தரும் பழமொழி

(1) பேராசை பெருந்தரித்திரம்.


(2) பொறுத்தார் பூமியாள்வார்.

(3) போதுமென்ற மனமே பொன்செய்யும் மருந்து.

● கட்டங்களுக்குள் அம்புக்குறிகள் வரையப்பட்டுள்ள தாள்கள் இரண்டு கீழே தரப்பட்டுள்ளன. அவற்றை அவதானித்து 34, 35 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.




உரு : 1




உரு : 2

34. உரு : 1 இல் வரையப்பட்டுள்ள அம்புக்குறிகளில் அதிகம் காணப்படுவது எது?

(1) ← (2) ↑ (3) ↓

35. உரு : 1 இலும் உரு : 2 இலும் உள்ள A அடையாளத்தை ஒன்றன் மீது ஒன்று அமையுமாறு ஒரு தாளின் மீது மற்றைய தாள் வைக்கப்பட்டது. கிடைத்த புதிய கட்ட வலையில் ↑ எனும் அம்புக்குறி காணப்படும் தடவைகள் எத்தனை?

(1) மூன்று (2) நான்கு (3) ஐந்து



www.ikeou.lk

36. ஒரு நகரத்தை இரு கட்டங்களில் அபிவிருத்தி செய்யத் திட்டமிடப்பட்டிருந்தது. முதல் கட்டத்திற்குப் 10 மாதங்களும் இரண்டாம் கட்டத்திற்கு 15 மாதங்களும் எடுக்கின்றன. நகரத்தின் அபிவிருத்திப் பணி 2022 ஜனவரி மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது எனின், எந்த ஆண்டில் நகரம் அபிவிருத்தி செய்து முடிக்கப்படும்?

(1) 2026 (2) 2025 (3) 2024

37.

| | | |
|---|---|---|
| 3 | 18 | 2 |
| 2 | 16 | 4 |
| 3 | 36 | ..... |


எண்கள் எழுதப்பட்டுள்ள கோலத்திற்கு ஏற்ப வெற்றுக் கட்டத்துக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

(1) 4

(2) 8

(3) 12


38. நிகழ்வு ஒன்றின் ஐந்து சந்தர்ப்பங்கள் உருச் சட்டகத்தினுள் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளன. அவற்றின் சரியான ஒழுங்குமுறையாக வரக்கூடியது எது?



A B C D E

(1) C,E,D,A,B (2) E,C,D,A,B (3) C,E,A,D,B


39.



சிறிய பெட்டிகள் பலவற்றின் அடுக்கு ஒன்று அருகே தரப்பட்டுள்ளது. ஒரு சிறிய பெட்டியில் 10 சொக்கலேட்டுக்கள் வைக்கப்பட்டிருந்தன எனின், அடுக்கில் உள்ள எல்லாப் பெட்டிகளிலும் வைக்கப்பட்டுள்ள சொக்கலேட்டுக்களின் எண்ணிக்கை யாது?

(1) 120 (2) 240 (3) 360

40. கீழே தரப்பட்ட வட்டவடிவ ஓட்டப்பாதை 24 km தூரம் கொண்டது. அதன் A என்னும் இடத்தில் முகுந்தனும் காந்தனும் நிற்கின்றனர். அங்கிருந்து முகுந்தன் இடம் B இருக்கும் திசை வழியாக மணித்தியாலத்திற்கு 5 km என்னும் வீதத்திலும் காந்தன், இடம் H இருக்கும் திசைவழியாக மணித்தியாலத்திற்கு 3 km என்னும் வீதத்திலும் செல்கின்றனர். அவர்கள் இருவரும் மீண்டும் சந்திக்கும் இடம் எது?




(1) E

(2) F

(3) D

* * *

සියලුම හිමිකම් ඇවිරිණි]
(முழுப்பதிப்புரிமையுடையது)
All rights Reserved]

ஆசிரியர்: எம். ஏ. அபுதாஹிர்

# முன்னோடி வினாத்தாள் 7

5

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான முன்னோடி வினாத்தாள் 2022

## வினாத்தாள் II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

சுட்டெண்: .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
* **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
* இவ்வினாத்தாளில் **60** வினாக்கள் உள்ளன. சில வினாக்களில் உபபகுதிகளும் உள்ளன.
* எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை **இவ்வினாத்தாளிலேயே** எழுதுக.
* விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் **புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக.
* விடையின் கீழே கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும்போது சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழே கோடிடுக.
* செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

**விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்**

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 2 | |
| 3 | |
| 4 | |
| 5 | |
| 6 | |
| 7 | |
| 8 | |
| மொத்தம் இலக்கத்தில் | |
| மொத்தம் எழுத்தில் | |

| | முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும் |
|---|---|
| **முதலாவது பரீட்சகர்** புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப் பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன். | V/I/T |
| **இரண்டாவது பரீட்சகர்** முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன். | V/I/T |
| **மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர்** மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன். | V/I/T/EMF |
| **பிரதான பரீட்சகர்** மேற்பார்வை செய்தேன் இறுதிப்புள்ளிகள் சரியாகும் | V/I/T/CH |

[ பக். 2 ஐப் பார்க்க

STUDY ONLINE

# இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்




## இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

**WWW.LKEDU.LK**

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

1. பின்வரும் பந்தியை வாசிக்க.

மாணவர்களின் ஆக்கத் திறன்களை வளர்ப்பதை நோக்காகக் கொண்டு தாமரை கலை இலக்கிய வட்டம், ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்கிடையேயான போட்டி நிகழ்ச்சி ஒன்றை நடத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளது. போட்டிக்காக, தமது சொந்த ஆக்கங்களாக அமைந்த கதைகள், கட்டுரைகள், கவிதைகள், ஓவியங்கள் என்பனவற்றை மாணவர்கள் அனுப்பி வைக்க முடியும். நடுவர்கள் வழங்கும் தீர்ப்பின் அடிப்படையில் வெற்றியாளர்கள் தேர்வு செய்யப்படுவர். வெற்றி பெறுவோருக்கு சான்றிதழ்களும் வெற்றிக் கிண்ணங்களும் வழங்கப்படும்.

- பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.

(i) போட்டி நிகழ்ச்சியை நடத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ள அமைப்பு எது?

: .....

(ii) எதனை நோக்காகக் கொண்டு போட்டி நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது?

: .....

(iii) போட்டிக்காக மாணவர்கள் அனுப்பக் கூடிய ஆக்கங்கள் எவை?

: .....

(iv) தோல்வி என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

: .....

(v) பந்தியில் இடம்பெறும் உயர்திணைப் படர்க்கைப் பன்மைப் பெயர்ச் சொல் ஒன்றை எழுதுக.

: .....

(vi) போட்டியில் வெற்றிபெறுவோருக்கு வழங்கப்படுபவை எவை?

: .....

2. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள சரியான எழுத்துக் கூட்டல் உள்ள சொல்லை அடைப்புக் குறியினுள் இருந்து தெரிவு செய்து அதன்கீழ்க் கோடிடுக.

(i) தமிழ் மொழியின் (வளர்ச்சிக்கு / வளட்சிக்கு) பங்காற்ற வேண்டியது எமது கடமையாகும்.

(ii) அம்மா, பொங்கல் மற்றும் பலகாரங்களைப் (பறிமாரினாள் / பரிமாறினாள்)

3. பின்வரும் வாக்கியத்தை எழுத்து மொழியாக்கி நிகழ்கால வினைச்சொல் சேர்த்து மீண்டும் எழுதுக.

விவசாயிகள் வயலில வேல செய்தனர்.

: .....

4. பொருத்தமான இடங்களில் நிறுத்தக்குறிகளை இடுக.

(i) எனக்கு ஒன்றும் புரியவில்லை என்று குழப்பத்துடன் கூறினான்

(ii) அரசே நம் பூமிக்கு வேண்டிய சக்தியெல்லாம் சூரியனிடம் இருந்துதான் கிடைக்கின்றன

5. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய், பயனிலைத் தொடர்பு சரியாயின் '✓' எனவும் பிழையாயின் '×' எனவும் எதிரே உள்ள அடைப்புக் குறிக்குள் அடையாளம் இடுக.

(i) மான்கள் கூட்டமாகச் சென்றது. (.....)

(ii) அவையிரண்டும் தத்தம் இருப்பிடம் நோக்கிச் சென்றன. (.....)

(iii) வானில் விமானங்கள் வட்டமிட்டது. (.....)



www.ikeou.lk

சுட்டெண்: .....

6. பின்வரும் பிராணிக்குரிய தொனி மரபுப் பெயரை எழுதுக.

குரங்கு : .....

7. பெண்பால் சொல்லை எழுதுக.

மருத்துவன் : .....

8. பின்வரும் வாக்கியத்தை இறந்த காலத்தில் எழுதுக.

நான் வங்கிக்குச் செல்கின்றேன்.

: .....

9. பின்வரும் கருத்தைக் குறிக்கும் பழமொழியை எழுதுக.

இளமைப் பருவத்தில் துணிவு அதிகம்

: .....

10. கீழே தரப்பட்டுள்ள பந்தியை வாசியுங்கள்.

கோகுலம் ஆரம்பப் பாடசாலையின் மாணவனான பிரதீபன் கெட்டிக்காரச் சிறுவன். பத்து வயதுடைய அவன் ஐந்தாந் தரத்தில் கல்வி கற்கிறான். அவனுக்கு சாருமதி என்னும் சகோதரியும் ஆனந்தன் என்னும் சகோதரனும் உள்ளனர். காந்தன் என்னும் பெயருடைய அவனின் அப்பா கணக்காளராகப் பணிபுரிகிறார். சாந்தி என்னும் பெயருடைய அவனது அம்மா ஆசிரியையாகப் பணி புரிகிறார்.

- இப்பந்தியின் பிரதான நபர் பற்றிய விபரங்களை எழுதி, கீழே உள்ள விபரக் கோவையைப் பூர்த்தி செய்க.

(i) முழுப் பெயர் :

(ii) முதலெழுத்துக்களுடன் பெயர் :

(iii) வயது : 1 0

(iv) தந்தையின் பெயர் : கா ந் த ன்


(v) தாயின் பெயர் :

(vi) குடும்பத்தில் உள்ளவர்களின் எண்ணிக்கை :

11. தரப்பட்ட ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.

(i) Wind : .....  (ii) Pond : .....

12. ஒவ்வொரு படத்துக்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லைக் கட்டத்தினுள் ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

(i) 

N l f g

(ii) 

D g y



www.ikeou.lk

13. தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.

(i) good / is / a / boy / Ravi : .....

(ii) give / a / book / please / me : .....

14. 'பெப்போல்' என்ற சிங்களச் சொல்லுக்குரிய **தமிழ்ச்** சொல்லை எழுதுக.

: .....

15. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தினைத் **தமிழில்** எழுதுக.

வரிசையாக நில்லுங்கள் : .....

16. பின்வரும் எண்ணை எழுத்தில் எழுதுக.

9595 : .....

17. 

| | |
|---|---|
| 6 | 3 |
| 1 | 5 |

கட்டத்தினுள் உள்ள இலக்கங்களைக் கொண்டு நூறினிடத்தில் இலக்கம் 6 இடம்பெறுமாறு எழுதக் கூடிய மிகப் பெரிய எண்ணை எழுதுக.

: .....

18. கீழே தரப்பட்ட இந்து அராபிய எண்குறிகளுக்குரிய உரோம எண்குறிகளை எழுதுக.

(i) 14 : ..... (ii) 20 : .....

19. எண்கோலத்திற்கேற்ப வெற்றிடங்களில் இடம்பெறவேண்டிய எண்களை எழுதுக.

....., 171, 179, 187, .....

20. ஒன்றினிடத்து இலக்கம் 3, பத்தினிடத்து இலக்கம் 0, நூறினிடத்து இலக்கம் 7, ஆயிரத்தினிடத்து இலக்கம் 4, பத்தாயிரத்தினிடத்து இலக்கம் 5 ஆகவுள்ள எண் யாது?

: .....

21. ஒரு குவியலில் இருந்த கொய்யாப்பழங்களின் எண்ணிக்கை 36 ஆகும். குவியலின் $\frac{1}{4}$ இல் உள்ள கொய்யாப்பழங்களின் எண்ணிக்கை யாது?

: .....

22. ஒரு பாத்திரத்தில் 162 தாமரைப் பூக்கள் இடப்பட்டுள்ளன. இவ்வாறான மூன்று பாத்திரங்களில் உள்ள தாமரைப் பூக்களின் மொத்த எண்ணிக்கை யாது?

: .....

23. 

கடிகாரமுகம் காட்டும் நேரத்தை வாசிக்கக்கூடிய விதம் ஒன்று கீழே தரப்பட்டுள்ளது. அந்நேரத்தை வாசிக்கக் கூடிய இன்னொரு விதத்தை எழுதுக.

- ஒன்று கடந்து நாற்பத்தைந்து நிமிடங்களாகும்.
- .....

24. 832 இனை 4 இனால் வகுக்கும் போது விடை யாது? : .....

25. அண்ணனின் நிறை 48 kg 250 g ஆகும். தம்பியின் நிறை 34 kg 500 g ஆகும். அண்ணன் தம்பியிலும் பார்க்க எவ்வளவு நிறையால் கூடியவன்?

: .....kg .....g

26. 4 *l* 50 *ml* தேன், சம அளவான மூன்று போத்தல்களில் இட்டு நிரப்பப்பட்டது. ஒரு போத்தலில் இடப்பட்ட தேனின் அளவு யாது?

: .....*l* .....*ml*



www.ikeou.lk

27. A, B என்னும் இரண்டு நிறுவனங்கள் ஒரு நாளில் உற்பத்தி செய்த இனிப்புக்கள் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| இனிப்புகள் (சுவையின் வகை) | உற்பத்தி செய்த நிறுவனம் | |
|---|---|---|
| | A | B |
| கோப்பி | 1340 | 2169 |
| தோடம்பழம் | 3257 | 1209 |

(i) A, B ஆகிய இரு நிறுவனங்களும் உற்பத்தி செய்த கோப்பிச் சுவை இனிப்பு வகையின் மொத்த எண்ணிக்கை யாது?


: .....

(ii) நிறுவனம் A, உற்பத்தி செய்த கோப்பிச்சுவை இனிப்பு வகைகளின் எண்ணிக்கையைக் காட்டிலும் தோடம்பழச் சுவை இனிப்பு வகைகளின் எண்ணிக்கை எவ்வளவால் கூடியது?

: .....

28. உருவில் உள்ள தகவல்களுக்கேற்ப அட்டவணையில் உள்ள வெற்றிடத்தை நிரப்புக.

| இருந்து | வரைக்கும் | தூரம் |
|---|---|---|
| கொழும்பு | இரத்தினபுரி | 85 *km* |
| கொழும்பு | எஹலியகொடை | 60 *km* |
| அவிசாவளை | இரத்தினபுரி | 40 *km* |
| அவிசாவளை | எஹலியகொடை | ..... |





29. ஒரு குறித்த பிரதேசத்தில் சில நகரங்கள் அமைந்துள்ள விதம் படத்தில் காட்டப்பட்டுள்ளது.

(i) நகரம் A இற்கு கிழக்கே உள்ள நகரங்கள் எவை?

: .....

(ii) நகரம் D அமைந்திருப்பது நகரம் E இற்கு என்ன திசையிலாகும்?

: .....




● இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து **அதன் கீழ்க் கோடிடுக.**

30. அலுமினியப் பாத்திரத்தில் சமைக்கப்படும் உணவுடன் கலக்கக் **கூடாத** பொருள்
(1) இஞ்சி (2) கறுவா (3) கொறுக்காய்

31. மனிதனுக்கு, எருமையினால் கிடைக்கும் ஒரு பயனையும் வௌவாலினால் கிடைக்கும் ஒரு பயனையும் முறையே காட்டும் விடை,
(1) குற்றவாளிகளைப் பிடிக்க உதவுதல், குப்பைகளை உக்கச் செய்தல்.
(2) வயல் நடவடிக்கைகளுக்கு உதவுதல், வித்துக்களைப் பரவச் செய்தல்.
(3) வயல் நடவடிக்கைகளுக்கு உதவுதல், சூழல் மாற்றத்தை அறிவித்தல்.

32. ஆண்டின் குறித்த காலத்தில் மட்டும் காய்க்கும் பழங்கள்
(1) வாழை, பப்பாசி (2) பலா, கொய்யா (3) மரமுந்திரிகை, றம்புட்டான்



www.ikedu.lk

33. சூரிய ஒளி நன்றாகவிழும் இடத்தில் ஒரு மரத்தின் கிளை ஒரு பரிசோதனைக்காக பொலிதீன் பையினால் கட்டி வைக்கப்பட்டது. ஏறத்தாழ ஒரு மணித்தியாலத்திற்குப் பின் அதனை அவதானித்த போது,
(1) அதன் இலைகள் வாடி இருக்கக் காணப்பட்டன.
(2) இலைகள் ஓரளவு மஞ்சள் நிறமாகிக் காணப்பட்டன.
(3) பையினுள்ளே சிறிய நீர்த்துளிகள் படிந்திருக்கக் காணப்பட்டன.

34. பாம்பு கடித்தபோது உடனடியாக அளிக்கப்படும் முதலுதவி யாது?
(1) இறுக்கமான ஆடைகளைத் தளர்த்துதல்.
(2) கடித்த இடத்தைச் சவர்க்காரமிட்டு சுத்தமான நீரினால் நன்றாகக் கழுவுதல்.
(3) துப்புரவான காற்றோட்டம் கிடைக்குமாறு செய்தல்.

35. முற்காலத்தில் சேனைப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்ட எமது முன்னோர் விதைப்புச் செய்து வெளியேறும் தினத்தில் செய்தது,
(1) வார்கட்டல் (2) தீபக் குடிசை அமைத்தல் (3) காவற்பாடல்கள் பாடுதல்


36. பயிர்ச் செய்கையில் கையாளப்படும் 3R எண்ணக்கருவில் இடம்பெறும் **மீள் சுழற்சிப்படுத்தலுக்கு** உதாரணமாக அமைவது,
(1) உடன் உணவுகள், சிற்றுண்டிகளின் பயன்பாட்டைக் குறைத்தல்.
(2) கழித்தொதுக்கும் பொருள்களைக் கொண்டு பயிர்ச் செய்கைக்குப் பொருத்தமான சாடிகள் ஆக்குதல்.
(3) பயன்படுத்திய மரத்தளபாடங்களின் பகுதிகளை பயிர்ச்செய்கை நடவடிக்கையின் போது மீளப்பயன்படுத்துதல்.

37. தற்காலத்தில் பெரும்பாலான வாகனச் சாரதிகள் தமது பயணப்பாதையை இலகுவாகக் கண்டறிவதற்காகப் பயன்படுத்துகின்ற சாதனம்.
(1) வானொலி (2) திசைகாட்டி (3) கூட்டிகைத் தொலைபேசி

38. விற்றமின் A குறைபாட்டினால் ஏற்படக் கூடிய தாக்கம்.
(1) எலும்பு நோய்கள் (2) பற்கள் சிதைவுறுதல் (3) கண்பார்வை குறைவடைதல்

39. "நான் பெற்ற அமைதியை எனது நண்பர்களுக்கும், எனது வீட்டாருக்கும் என்னால் பகிர்ந்தளிக்க முடியும்" எனக் கண்களை மூடியபடி கூறுவது உள்ளத்தை இதப்படுத்தும் செயற்பாட்டின் பின்வரும் படிமுறைகளில் எதற்கு உரியதாகும்?
(1) மனவுறுதி (2) மலர்வு (3) பிரார்த்தனை

40. எது பாதுகாப்பான நடவடிக்கையாகும்?
(1) இடிமின்னல் வேளைகளில் திறந்தவெளிகளில் நிற்றல்.
(2) ஈரக்கைகளுடன் மின்சாரத்துடன் தொடுக்கப்பட்ட உபகரணங்களைத் தொடுதல்.
(3) இடிமின்னல் வேளைகளில் கைத்தொலைபேசியைத் துண்டித்துவைத்தல்.

41. 
அருகே தரப்பட்டுள்ள உபகரணம் பயன்படுத்தப்படுவது,
(1) ஒரு திரவத்தின் வெப்பநிலையை அளவிட.
(2) மின் ஒழுக்கு, மற்றும் மின்பாயும் இடங்களை அறிய.
(3) வீட்டுச் சுவர்களில் ஆளிகளைப் பதிக்க.

42. சிவப்பு, வெள்ளை ஆகிய நிறங்களைக் கலப்பதால் பெறப்படும் நிறம்,
(1) கபிலம் (2) செம்மஞ்சள் (3) ரோஸ்

www.ikeou.lk

43. 

இலங்கைத் தேசப்படத்தில் நிழற்றிக் காட்டப்பட்டுள்ள இரு மாகாணங்களும் எவை?

(1) சப்ரகமுவ மாகாணம், மத்திய மாகாணம்

(2) மேல் மாகாணம், வட மத்திய மாகாணம்

(3) வடமேல் மாகாணம், வட மாகாணம்

44. யாழ்ப்பாணக் கோட்டை, காலிக்கோட்டை ஆகியவற்றை முதலில் அமைத்தவர்கள்,
(1) ஆங்கிலேயர் (2) ஒல்லாந்தர் (3) போர்த்துக்கேயர்

45. இறைச்சி, பப்பாசிப்பழம், மரவள்ளிக்கிழங்கு ஆகிய ஒவ்வொன்றிலும் அதிகம் அடங்கியுள்ள போசணைகளை முறையே காட்டும் விடை,
(1) புரதம், விற்றமின், காபோவைதரேற்று
(2) காபோவைதரேற்று, கல்சியம், விற்றமின் (3) கொழும்பு, விற்றமின், புரதம்

46. நன்கு சூடாக்கப்பட்ட உலோகக் கரண்டியில் நீர்த்துளி ஒன்றை இடும் போது **நிகழாதது**,
(1) நீர் ஆவியாதல் (2) ஒலி எழுதல் (3) நீர், நிறம் மாறுதல்

47. கேத்தலின் மூக்கின் ஊடாக வெளிவரும் நீராவி படுமாறு உலோகத் தகடு ஒன்று பிடிக்கப்பட்டுள்ளதைப் படம் காட்டுகிறது. இங்கு உலோகத்தகடு,




(1) நீராவியின் திசையை மாற்றுகிறது.
(2) நீராவியைக் குளிரச் செய்கிறது.
(3) நீரை நீராவியாக மாற்றுகிறது.

48. உப்பிடுவதன் மூலம் நீண்டகாலம் பேணப்படும் உணவுகள்,
(1) பினாட்டு, பலாச்சுளை (2) பனம்பழம், பலாக்காய் (3) மாங்காய், எலுமிச்சம்பழம்

49. பயன்படுத்தப்பட்ட சமையல் பாத்திரங்களை நன்றாகக் கழுவிய பின்னர் அவற்றை உலரவிடவும் வேண்டும். அவ்வாறு உலரவிடுவதற்குப் பிரதான காரணமாக அமைவது எது?
(1) பாத்திரங்களை நீண்ட காலம் பயன்படுத்த முடிகின்றமை
(2) ஈரலிப்பு உள்ள பாத்திரங்களில் கிருமிகள் வளர அதிக வாய்ப்பு இருக்கின்றமை
(3) உலரவிடுவதால் பாத்திரங்கள் அழகு பெறுகின்றமை

50. நீரிழிவு நோய் ஏற்படப் பிரதான காரணம் எது?
(1) இனிப்பான உணவுகள், மாப்பொருள் உணவுகள் என்பவற்றை அதிகம் உண்ணுதல்
(2) குறித்த வேளையில் உணவு உண்ணாதிருத்தல்
(3) உடன் உணவுகள், எண்ணெய் அதிகம் அடங்கியுள்ள உணவுகளை அடிக்கடி உண்ணுதல்

51. மிஹிந்து ஊர்வலம் இடம் பெறும் மாதம்
(1) ஜனவரி (2) ஜூன் (3) ஜூலை


52. பயிர்ச் செய்கையில் வேப்பம் வித்துச் சாறு பயன்படுத்தப்படுவது,
(1) பசளைக்காக
(2) தாவரங்கள் பூப்பதைத் தூண்டுவதற்காக
(3) பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதற்காக

www.ikedu.lk

53. இலங்கைக்கே உரித்தான முலையூட்டி **அல்லாதது,**

(1) கருங்குரங்கு (2) மரநாய் (கலவத்தன்) (3) கொம்பு ஓணான்

54. உலர் கலத்துடன் LED மின்குமிழ்கள் கம்பிகளினால் இணைக்கப்பட்டுள்ள மூன்று சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. இவற்றுள் LED மின்குமிழ் ஒளிரும் சந்தர்ப்பம் எது?


(1)


(2)


(3)

55. பெரிய நீர்த்தேக்கங்களின் அணைக்கட்டின் அடிப்பகுதி அகலம் கூடியதாகவும் மேற்பகுதி அகலம் குறைவாகவும் அமைக்கப்படுவதற்கான காரணம் யாது?

(1) நீர்த்தேக்கத்தின் அடிப்பகுதியில் அமுக்கம் குறைவாக இருக்கின்றமை.
(2) நீர்த்தேக்கத்தின் அடிப்பகுதியில் அமுக்கம் உயர்வாக இருக்கின்றமை.
(3) நீர்த்தேக்கத்தின் அடிப்பகுதியிலும் மேற்பகுதியிலும் அமுக்கம் சமமாக இருக்கின்றமை.

56. சந்திரனின் ஈர்ப்புவிசைத் தாக்கம் காரணமாக கடல் நீர் மட்டம் உயர்தல்,


(1) வற்று ஆகும் (2) பெருக்கு ஆகும் (3) சுனாமி ஆகும்

57. மின்காந்தம் பயன்படுத்தப்படும் ஓர் உபகரணம்,

(1) மின்சூள் (2) ஊசித்துளைக் கமரா (3) மின்மணி

58. சமைப்பதற்காகக் கொண்டுவரப்பட்ட கீரை, மரக்கறி என்பவற்றை வெட்டுவதற்கு முன்னர் கழுவ வேண்டியது

(1) உப்பு நீரில் (2) வெந்நீரில் (3) குளிரேற்றிய நீரில்

59. 

இக்குறியீடு பொறிக்கப்பட்டுள்ள பொருட்களைப் பயன்படுத்திய பின்னர் கழித்து ஒதுக்கும் போது செய்ய வேண்டியது,

(1) இவ்வாறான கழிவுப் பொருள்களைச் சேகரிக்கும் இடங்களில் ஒப்படைத்தல்.
(2) எரியூட்டுதல்
(3) குப்பைத் தொட்டியில் இடுதல்

60. 'நானும் நண்பர்களும் விளையாடிக் கொண்டிருந்த வேளை பெருமழை பெய்யத் தொடங்கியது' என்பதைத் தலைப்பாகக் கொண்டு **மூன்று** வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் **ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல்** வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்பும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருக்க வேண்டும்.)

1. .....
.....

2. .....
.....

3. .....
.....



www.ikeduk

Q First
174, Al-Munawwara Road,
Akkaraipattu - 04.

077 2933684,
077 0763923

18.11.2022

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2022

## முன்னோடி வினாத்தாள் இல. 6, 7

இவ்வருடத்திற்கான இறுதி இரண்டு முன்னோடி வினாத்தாள்களும் இத்துடன் அனுப்பிவைக்கப் பட்டுள்ளன. இவற்றை பின்வரும் ஒழுங்கில் நடாத்தி முடிக்க தங்களுக்கு ஆலோசனை வழங்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| இல | : 6 - | 28.11.2022 |
| இல | : 7 - | 30.11.2022 |

ஏலவே தங்களுக்கு அறிவிக்கப்பட்டதற்கிணங்க இவ்வருடம் எமது வினாப்பத்திரங்கள் ஏழாகக் குறைக்கப்பட்டுள்ளன. விலைவாசி ஏற்றம், தபால் கட்டண உயர்வு என்பனவே இதற்கான காரணங்களாகும். எனவே, இதனை மனங்கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறோம். ஒத்துழைத்த அனைத்துத் தரப்பினருக்கும் நன்றிகள்.

2023 இன் வினாப்பத்திரங்கள் தொடர்பில் பல புதிய மாற்றங்களை நாம் அறிமுகம் செய்யவுள்ளோம். விபரங்கள் பின்னர் அறியத்தரப்படும்.
நன்றி.

பணிப்பாளர்
Q First

# Q - First முன்னோடி வினாத்தாள் - 2022 தரம் - 5

## முன்னோடி வினாத்தாள் 6 - I

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. (1) | 2. (1) | 3. (2) | 4. (3) | 5. (3) | 6. (2) | 7. (2) |
| 8. (2) | 9. (1) | 10. (2) | 11. (2) | 12. (3) | 13. (2) | 14. (1) |
| 15. (3) | 16. (3) | 17. (2) | 18. (3) | 19. (2) | 20. (1) | 21. (2) |
| 22. (3) | 23. (2) | 24. (2) | 25. (2) | 26. (3) | 27. (1) | 28. (2) |
| 29. (3) | 30. (1) | 31. (1) | 32. (3) | 33. (3) | 34. (3) | 35. (2) |
| 36. (2) | 37. (3) | 38. (1) | 39. (2) | 40. (1) | | |

## முன்னோடி வினாத்தாள் 6 - II

வினா இல 1, 2, 3, 4, 7, 8, 10, 11, 12, 13, 14, 15 ஆகிய வினாக்களுக்கான விடைகளில் எழுத்துப் பிழைகள் இருப்பின் புள்ளி வழங்க வேண்டாம்.

1. (i) அடர்ந்த மரங்களாலும் வண்ணப் பூக்களாலும் (1 புள்ளி)
   (ii) மரங்கள் அதிகம் இருப்பதால் (1 புள்ளி)
   (iii) குளிர்ச்சியை (1 புள்ளி)
   (iv) வளைந்து நெளிந்து (1 புள்ளி)
   (v) பறவைகளின் கானம் (1 புள்ளி)
   (vi) அடர்ந்த / வண்ண (1 புள்ளி)

2. (i) பரிசளிப்பு (1 புள்ளி)
   (ii) கழிந்தது (1 புள்ளி)

3. (i) கலகல (1 புள்ளி)
   (ii) கடகட (1 புள்ளி)

www.ikedu.lk


LEARN EASY
- KNOWLEDGE IS POWER -
www.learneasy.lk
LEARN EASY
KNOWLEDGE IS POWER
zoom
மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்
ICT
Maths
English
Commerce
Tamil
History
Science
Sinhala
இன்னும் பல
தரம்
01-A/L
Medium
தமிழ்/ English
76667-4945
தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன
www.learneasy.lk || www.lkedu.lk

# Q - First முன்னோடி வினாத்தாள் - 2022 தரம் - 5 **6** - II தொடர்

4. நெல் *(1 புள்ளி)*

5. பெற்றோர் *(1 புள்ளி)*

6. (i) "சிற்பங்களைத் தொடவேண்டாம்" என்று கூறினார். *(1 புள்ளி)*

(ii) சனி, ஞாயிறு வார இறுதி நாட்களாகும். *(1 புள்ளி)*

7. அவள் பென்சில் வாங்கினாள். *(1 புள்ளி)*

8. (i) குற்றத்தை மறைத்தல் *(1 புள்ளி)*

(ii) வெற்றியடைதல் *(1 புள்ளி)*

9. (i) பதிந்துள்ளன (ii) நடப்பட்டிருந்தன (iii) வைத்தது *(3 புள்ளிகள்)*

10. (i) தன்னம்பிக்கை *(1 புள்ளி)*

(ii) சிற்பங்கள் கண்ணையும் கருத்தையும் கவரும் அழகு வாய்ந்தவை *(1 புள்ளி)*

11. (i) சிற்றுண்டிச் சாலை (ii) படுக்கையறை *(2 புள்ளிகள்)*

12. (i) Wheelbarrow (ii) Scissor *(2 புள்ளிகள்)*

13. (i) How much is a ruler? *(1 புள்ளி)*

(ii) My dog likes meat *(1 புள்ளி)*

14. எண்பது *(1 புள்ளி)*

15. வேலாவ கீயத? கியன்ன *(1 புள்ளி)*

16. பதினாறாயிரத்து ஐம்பது *(2 புள்ளிகள்)*

17. 4068 *(2 புள்ளிகள்)*

18. 13560, 13506, 12605 *(2 புள்ளிகள்)*

19. (i) 81 (ii) 2100 *(2 புள்ளிகள்)*

20. (i) B (ii) C (iii) A

*(மூன்றும் சரி எனின் 2 புள்ளிகள், ஏதேனும் 2 சரி எனின் 1 புள்ளி, 1 சரி எனின் புள்ளி இல்லை.)* *(2 புள்ளிகள்)*

21. (i) 6368 *(2 புள்ளிகள்)*

(ii) 72 *(2 புள்ளிகள்)*

22. *(ஏதேனும் 6 பகுதிகளுக்கு நிறந்தீட்டியிருப்பின் புள்ளி வழங்குக.)* *(2 புள்ளிகள்)*

23. 504 *(2 புள்ளிகள்)*

24. 22:20 *(2 புள்ளிகள்)*

25. 103 *(2 புள்ளிகள்)*

26. (i) சதுரமுகி *(1 புள்ளி)*

(ii) 26 *(2 புள்ளிகள்)*

27. 750 *(2 புள்ளிகள்)*

28. 360 / 360.00 *(2 புள்ளிகள்)*

29. (i) 4 / நான்கு *(2 புள்ளிகள்)*

(ii) 8 ஐ அடையாளப்படுத்தி நிழற்றியிருப்பின் புள்ளி வழங்குக. *(2 புள்ளிகள்)*

30. (1) 31. (1) 32. (2) 33. (1) 34. (3) 35. (1) 36. (3) 37. (2) 38. (3)
39. (3) 40. (1) 41. (3) 42. (3) 43. (1) 44. (1) 45. (2) 46. (2) 47. (1)
48. (3) 49. (1) 50. (1) 51. (3) 52. (3) 53. (3) 54. (2) 55. (3) 56. (1)
57. (3) 58. (1) 59. (2) *(30 புள்ளிகள்)*

60. பொருத்தமான வாக்கியங்களுக்குப் புள்ளி வழங்குக. வாக்கியமொன்றில் ஒரு எழுத்துப் பிழை இருப்பின் அவ்வாக்கியத்திற்கு 1 புள்ளி மாத்திரம் வழங்குக. ஒன்றுக்கு மேற்பட்ட பிழைகள் இருப்பின் அவ்வாக்கியத்திற்குப் புள்ளி வழங்க வேண்டாம். *(6 புள்ளிகள்)*

*முழுவிடைத்தாளையும் கருத்திற்கொண்டு தெளிவான எழுத்து, நேர்த்தி என்பவற்றிற்கு போனஸாக 1 புள்ளி வழங்குக.*

www.ikeau.lk

# Q - First முன்னோடி வினாத்தாள் - 2022 தரம் - 5



## முன்னோடி வினாத்தாள் 7 - I

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. (2) | 2. (3) | 3. (3) | 4. (3) | 5. (2) | 6. (2) | 7. (3) |
| 8. (1) | 9. (3) | 10. (2) | 11. (2) | 12. (2) | 13. (3) | 14. (1) |
| 15. (2) | 16. (2) | 17. (2) | 18. (2) | 19. (2) | 20. (3) | 21. (1) |
| 22. (3) | 23. (3) | 24. (1) | 25. (2) | 26. (3) | 27. (3) | 28. (1) |
| 29. (2) | 30. (2) | 31. (1) | 32. (2) | 33. (3) | 34. (2) | 35. (2) |
| 36. (3) | 37. (1) | 38. (1) | 39. (2) | 40. (2) | | |

## முன்னோடி வினாத்தாள் 7 - II

*வினா இல 1, 3, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 15 ஆகிய வினாக்களுக்கான விடைகளில் எழுத்துப் பிழைகள் இருப்பின் புள்ளி வழங்க வேண்டாம்.*

1. (i) தாமரை கலை இலக்கிய வட்டம் *(1 புள்ளி)*
   (ii) மாணவர்களின் ஆக்கத் திறன்களை வளர்ப்பதை *(1 புள்ளி)*
   (iii) கதைகள், கட்டுரைகள், கவிதைகள், ஓவியங்கள் *(1 புள்ளி)*
   (iv) வெற்றி *(1 புள்ளி)*
   (v) மாணவர்கள் / நடுவர்கள் *(1 புள்ளி)*
   (vi) சான்றிதழ்களும் வெற்றிக் கிண்ணங்களும் *(1 புள்ளி)*

2. (i) வளர்ச்சிக்கு *(1 புள்ளி)*
   (ii) பரிமாறினாள் *(1 புள்ளி)*

3. விவசாயிகள் வயலில் வேலை செய்கின்றனர். *(1 புள்ளி)*

4. (i) "எனக்கு ஒன்றும் புரியவில்லை" என்று குழப்பத்துடன் கூறினாள். *(1 புள்ளி)*
   (ii) அரசே, நம் பூமிக்கு வேண்டிய சக்தியெல்லாம் சூரியனிடம் இருந்துதான் கிடைக்கின்றன. *(1 புள்ளி)*

5. (i) × *(1 புள்ளி)*
   (ii) ✓ *(1 புள்ளி)*
   (iii) × *(1 புள்ளி)*

6. அலப்பும் *(1 புள்ளி)*

7. மருத்துவிச்சி *(1 புள்ளி)*

8. நான் வங்கிக்குச் சென்றேன். *(1 புள்ளி)*

9. இளங்கன்று பயமறியாது *(1 புள்ளி)*

10. (i) கா ந் த ன் பி ர தீ ப ன் *(1 புள்ளி)*
    (ii) கா . பி ர தீ ப ன் *(1 புள்ளி)*
    (iii) 1 0 *(1 புள்ளி)*
    (iv) கா ந் த ன் *(1 புள்ளி)*
    (v) சா ந் தி *(1 புள்ளி)*
    (vi) 5 / 05 *(1 புள்ளி)*

www.lkedu.lk

11. (i) காற்று (1 புள்ளி)
(ii) குளம் (1 புள்ளி)

12. (i) National flag (1 புள்ளி)
(ii) Dragonfly (1 புள்ளி)

13. (i) Ravi is a good boy (1 புள்ளி)
(ii) Please give me a book (1 புள்ளி)

14. பப்பாசிப் பழம் (1 புள்ளி)

15. பேலியட்ட ஹிட்டகன்ன (1 புள்ளி)

16. ஒன்பதாயிரத்து ஐந்நூற்றுத் தொண்ணூற்றைந்து / தெண்ணூற்று ஐந்து (2 புள்ளிகள்)

17. 5631 (2 புள்ளிகள்)

18. (i) XIV (1 புள்ளி)
(ii) XX (1 புள்ளி)

19. 163, 195 (2 புள்ளிகள்)

20. 54703 (2 புள்ளிகள்)

21. 9 (2 புள்ளிகள்)

22. 486 (2 புள்ளிகள்)

23. இரண்டுக்கு பதினைந்து நிமிடங்கள் ஆகும். (2 புள்ளிகள்)

24. 208 (2 புள்ளிகள்)

25. 13, 750 (2 புள்ளிகள்)

26. 1, 350 (2 புள்ளிகள்)

27. (i) 3509 (2 புள்ளிகள்)
(ii) 1917 (2 புள்ளிகள்)

28. 15 *km* (2 புள்ளிகள்)

29. (i) B, G (2 புள்ளிகள்)
(ii) வடகிழக்கு (2 புள்ளிகள்)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 30. (3) | 31. (2) | 32. (3) | 33. (3) | 34. (2) | 35. (2) | 36. (2) | 37. (3) | 38. (3) | 39. (2) |
| 40. (3) | 41. (2) | 42. (3) | 43. (2) | 44. (3) | 45. (1) | 46. (3) | 47. (2) | 48. (3) | 49. (2) |
| 50. (1) | 51. (2) | 52. (3) | 53. (3) | 54. (1) | 55. (2) | 56. (2) | 57. (3) | 58. (1) | 59. (1) |

(30 புள்ளிகள்)

60. பொருத்தமான வாக்கியங்களுக்குப் புள்ளி வழங்குக. வாக்கியமொன்றில் ஒரு எழுத்துப் பிழை இருப்பின் அவ்வாக்கியத்திற்கு 1 புள்ளி மாத்திரம் வழங்குக. ஒன்றுக்கு மேற்பட்ட பிழைகள் இருப்பின் அவ்வாக்கியத்திற்குப் புள்ளி வழங்க வேண்டாம். (6 புள்ளிகள்)

முழுவிடைத்தாளையும் கருத்திற்கொண்டு தெளிவான எழுத்து, நேர்த்தி என்பவற்றிற்கு போனஸாக 2 புள்ளிகள் வழங்குக.

www.ikedu.lk